முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 640**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

30.06.2021, புதன்கிழமை

1. பார்காக்க வந்த வள்ளலே
பரமானந்த சதா சிவ சற்குருவே
சீர்திருத்தம் உலகில் சன்மார்க்க வழி
சிறப்பாய் செய்து உலகமக்களுக்கு அழியாமை அருள
2. அருளவந்த ஆறுமுக அரங்கனே
ஆறுமுகன் யானும் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
அருளுவேன் பிலவ மிதுன திங்கள் தன்னில்
அரங்கன் தர்ம ஞான கொள்கை
3. கொள்கையதும் உலகை மீட்டு
குறையில்லா ஞானசித்தர் ஆட்சிக்காலமாக
வல்லமைபட உருவாக்கும் நிலை கனிந்துவர
வரம்பெற்று அரங்கன் வழி தொண்டு செய்யும் மக்கள் மூலம்
4. மூலமாக இந்த அற்புதம் நடக்கும்
முழுமைபட உலகம் ஞானயுக மாற்றம் பெறும்
காலனை வென்ற அரங்க ஞானிவழியில்
கலியுகத்தார் ஒன்றிணைந்து வருகவருக
5. வருகவே உலகமெங்கும் ஞானபலம் கூடி
வையகம் பேரழிவில் இருந்து மீண்டு
கோலமதாய் சர்வபலம் யோகம்
குறையில்லாத அனைத்துவளங்களும் கூடி
6. கூடியே அகிலம் பெருமாற்றம் காணும்
குருராஜன் அரங்கன் தயவாலே
ஈடேறும் சடுதி இந்த அற்புதங்கள்
இணைந்து அரங்கன் வழி வரவர
7. வருகவே வையகத்தில் மாற்றம் உண்டு
வளர்ந்து உலகமெங்கும் மக்களிடை
மக்களிடை சமத்துவமும் சமதர்மநிலையும்
மறுமையை வெல்லும் மகா சூட்சுமமும் கிட்டியே
8. தேக்கமின்றி இந்த உலகம் அற்புதம் பெறும்
தெய்வஞான ஆட்சியாக சடுதி கனியும்
ஆற்றல்பட அரங்கனால் இந்த மாற்றம்
அகிலமெங்கும் கண்டு ஏற்றம் காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—